Book review /
வழிப்போக்கன்

கலை இலக்கிய விமர்சகர் #இந்திரன் அவர்களின் #உலகிலேயே_சிறந்த_புத்தகத்தை வாசிக்கிறேன்.
கூண்டுக்குள் இருப்பதும் வெற்றிடம் தான் என்றாலும் எப்படி பறவைக்கு அது போதுமானதாய் இருப்பதில்லையோ அப்படி இவருக்கும் அவர் செய்யும் புதுப்புது முயற்சிகள் போதுமானதாய் இருப்பதில்லை. தனது வாழ்வையே பரிசோதனை கூடமாக மாற்றி தொடர்ந்து ஒவ்வொரு படைப்பிலும் புதிய முயற்சியை செய்கிறார். இந்த முயற்சி இதுவரையிலும் உலகில் இன்னொருவர் செய்யாதது. உலகில் உள்ள அத்தனை மொழியிலும் இல்லாத புது முயற்சி முதல் முயற்சி இந்த நூல்.
கவிஞன் எழுத்தாளன் என்பதைக் காட்டிலும் என்னை தேர்ந்த வாசகன் என்று சொல்லிக்கொள்வதில் எனக்கு எப்போதும் கொஞ்சம் கர்வம் உண்டு. அந்த வகையில் இது சிறந்த புத்தகம் தான். பிரிக்கும் போதே அதிர்ச்சி, ஆச்சரியம் என வெவ்வேறு உணர்வு நிலைகளில் பயணிக்க வைத்த முதல் நூல்.
ஒரு நாவல் அல்லது கவிதை, கட்டுரையை வாசித்திருப்பீர்கள் பொருளுக்கு ஏற்ப உங்கள் மனநிலை பயணித்துப் பின் இயல்புக்கு திரும்பியிருக்கும், ஆனால் இந்த நூல் அப்படியல்ல வாசகனுக்கு அழுத்தத்தை பொறுப்பை கடமையை தரக்கூடிய நூல்.
அந்த அழுத்திலிருந்து அந்த பொறுப்பிலிருந்து அந்த கடமையிலிருந்து இன்னொரு படைப்பை வாசகனை கொடுக்க வைக்கும் நூல் இது.
வாசகனுக்குள் மறைந்திருக்கும் படைப்பாளனை வெளியுலகிற்கு அடையாளம் காட்ட விரும்பும் நூல் இது.
நிச்சயம் வாங்கி வாசித்தால் ஒரு சிறந்த எதிர்காலம் உண்டு, ஒரு சிறந்த வாழ்க்கையுண்டு.
வாங்கி வாசியுங்கள் புரியும்.
உங்களில் யார் அந்த அதிர்ஷ்டசாலி.?
வழிப்போக்கன்


உலகிலேயே சிறந்த
இந்திரன்